

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் தேசிய தோட்டக்கலை இயக்கம் 2025–26 கீழ், 40 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ .12 இலட்சம் மதிப்பில் 50 சதவிகித மானியத்துடன் கூடிய நடமாடும் காய்கனிகள் விற்பனை வண்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா , தலைமையில் , வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் வழங்கினார் .

### அரசு உதவிபெறும் பள்ளி ஆசிரியர்கள், ஓய்வூதியர்களுக்கு

# நிலுவைச் சம்பளத்தை உடனே வழங்காவிட்டால் போராட்டம்!

## புதுச்சேரி அரசுக்கு எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா எச்சரிக்கை!



புதுச்சேரி, ஆக.28-

புதுச்சேரி மாநில சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா விடுத்துள்ள செய்தி அறிக்கையில் கூறியிருப்பதாவது: -

புதுச்சேரியில் கல்வியின் தரம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது என்பதை அனைவரும் அறிவர். அதுவும் இந்த என்.ஆர்.காங்கிரஸ் - பாஜக கூட்டணி அரசு வந்த பிறகு அனைத்து பள்ளிகளிலும் சிபிஎஸ்இ பாடமுறை திணிக்கப்பட்டு அது மேலும் அதிகமாகி உள்ளது. இந்நிலையில் அரசு உதவிபெறும் பள்ளிகளுடைய நிலைமை தள்ளாட்டத்தில் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஒவ்வொரு காலாண்டும் அவர்கள் தங்களை நிலை நிறுத்துவதற்கு அரசுடன் போராடுகின்ற நிலைமை தொடர் கதையாகி வருகிறது.

ஆசிரியர்கள் திருப்தி யாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தால்தான் மாணவர்களுக்கு முறையாக பாடங்களை போதிக்க முடியும். நான்கு மாதம் ஐந்து மாதம் சம்பளத்தை நிலுவையில் வைத்து, அவர்களை பட்டினி போட்டுவிட்டு பாடத்தை நடத்த சொன்னால் எந்த அளவிற்கு அது திருப்தியாக இருக்கும் என்பதை ஆட்சியாளர்கள் உணர வேண்டும். இதனால் ஒரு எதிர்கால சமுதாயமே பாழடையும் நிலையை கல்வித்துறை நிர்வாகம் நிகழ்த்தி வருவது கண்டிக்கத்தக்கதாகும்.

புதுச்சேரியில் இத்தனை அரசு உதவிபெறும் பள்ளிகள் இருக்கின்றது. அதற்கான நிதி ஒதுக்கீடு, வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற நிலையில் மாதம் மாதம் அவர்களுக்கு சம்பளம் கொடுப்பதில் என்ன சிக்கல் இருக்கிறது. தற்பொழுது நான்கு மாத சம்பள நிலுவையில் அவர்கள் பணியாற்றுவது கல்வித்துறை நிர்வாகத்தில் இருக்கிற சீர்கேட்டை தான் பிரதிபலிக்கிறது. அத்துடன் ஆட்சியாளர்களின் அலட்சித் தன்மையையும், திறமையின்மையையும் காட்டுகிறது. நான்கு மாத சம்பளத்திற்கான மதிப்பீடு தயார் செய்து அனுப்பியும் அதை நிறைவேற்றாத ஒரு நிர்வாகத்தை நாம் வேறு என்ன சொல்வது.

அத்துடன் 20 ஆண்டுகளாக அந்த பள்ளிகளில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள், மறைந்தவர்கள், வேலையை விட்டு நின்றவர்கள் உண்டு. அந்த 20 ஆண்டுகளில் ஏற்பட்ட 400 காலிப்பணியிடங்களை நிரப்பாமல் எப்படி பள்ளியை நடத்த முடியும். மாணவர்களுக்கு முறையாக எப்படி கற்பிக்க முடியும். காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு பல முறை கோரிக்கை வைத்தும் நிர்வாகம் கண்டுகொள்வதாக தெரியவில்லை. ஒரே மாதிரி வேலைக்கு ஒரே மாதிரி ஊதியம் என்பதை அரசு பின்பற்றி தான் அனைத்து ஆசிரியர்களுக்கும் சமமான சம்பளத்தை நிர்ணயித்து இருக்கிறது. இந்நிலையில் 7-வது ஊதியக்குழு பரிந்துரை 2017-ல் செயல்பாட்டுக்கு வந்த நிலையில், இந்த உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டும் 2023-ல் தான் செயல்பாட்டுக்கு வந்தது. இந்த ஆறு ஆண்டு நிலுவைத் தொகையை அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு முறையாக வழங்கிய நிலையில் ஏன் உதவி பெறும் ஆசிரியர்கள் மட்டும் பாதிக்கப்படுகிறார்கள். இந்த இரண்டாம் நிலையாக அவர்களை நடத்துவது என்பதை இந்த கல்வித்துறை கைவிட வேண்டும். அது மட்டும் அல்லாமல் சம்பளம், ஓய்வூதியம் இவைகளை 5 சதவீதம் பள்ளி நிர்வாகம் செலுத்த வேண்டுமென்ற கண்டிப்பால் ஓய்வூதியதாரர்கள் மிக மோசமாக பாதிக்கப்படுகிறார்கள். அந்த 5 சதவீத தொகையை அவர்களே செலுத்தி அதன் பின் ஓய்வூதியம் பெறுகின்ற அவலத்தை கல்வித்துறை எப்படி அனுமதிக்கிறது.

ஆகவே, கல்வித்துறையின் இந்த மாற்றாந்தாய் மனப்பான்மை மாற்றப்பட வேண்டும். அரசுப் பள்ளி ஆசிரியர்களோடு, அரசு உதவி பெறும் ஆசிரியர்கள் இணையானவர்கள், சமமானவர்கள் என்பதை ஆட்சியாளர்கள் உணர்ந்துப் பார்த்து இந்த அவலங்களை களைய வேண்டும். மாதம் தோறுமான ஊதியத்தை உடனடியாக உறுதி செய்ய வேண்டும். மாத கணக்கிலான தாமதத்திற்கு துறையின் சம்பந்தப்பட்ட அதிகாரி மீது ஒழுங்கு நடவடிக்கை பாய வேண்டும். இல்லையேல் புதுச்சேரி மாநிலத்தில் செயல்படுகின்ற 35 அரசு உதவிபெறும் பள்ளிகளையும் ஒருங்கிணைத்து இந்த அரசுக்கு எதிர்ப்பான போராட்டத்தை முன்னெடுக்க நேரிடும் என்பதை எச்சரிக்கையாக தெரிவிக்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், இந்திலி தனியார் கல்லூரியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்2025னை மாவட்ட வருவாய் அலுவலர் ரா.ஜீவா முன்னிலையில், கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் 26.08.2025 – செவ்வாய்க்கிழமை அன்று தொடங்கி வைத்து, விளையாட்டு வீரர்களுக்கு பாராட்டுக் கேடையங்களை வழங்கி சிறப்புரை நிகழ்த்தினார், இந்நிகழ்வில் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் ரா.சுரேஷ்குமார், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள், ஆசிரியர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### சிவகங்கை மாவட்ட முன்னாள் தி.மு.க. இளைஞர் அணி

# துணை அமைப்பாளர் ஸ்டீபன் முதலாவது ஆண்டு நினைவு தினம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் - மு.தென்னவன் முன்னணியினர் பங்கேற்பு!

சிவகங்கை, ஆக.28-

சிவகங்கை மாவட்ட முன்னாள் இளைஞரணி துணை அமைப்பாளர் கழக முன்னோடி வி.எஸ்.எம். ஸ்டீபன். கடந்த 23. 8. 2024 ம்தேதி இயற்கை எய்தினார் . அவருடைய நினைவைப்போற்றும் வகையில் காளையர்ககோவில் தாலுகா வலையப்பட்டியில் உள்ள அவரது நினைவிடத்தில் கூட்டுறவுத் துறை அமைச்சர் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன்,ஸ்டீபன் மனைவி திருமதி வி.எஸ். எம்.எஸ்தர் மேரிஸ்டீபன், மகள் நிவேதா, மருமகன் ஜெகன், மகன் ஜோரஞ்சன் ,மற்றும் குடும்பத்தினர் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

அதை தொடர்ந்து மாவட்ட கழக துணை செயலாளர்கள் த. சேங்கை மாறன், திருமதி ஜோன்ஸ் ருசோ, பொதுக்குழு உறுப்பினர் பி.டி.ஆர்.முத்து, ஒன்றிய செயலாளர்கள் யோக. கிருஸ்ணகுமார், வே.தமிழ் மாறன், மண்டல பார்க்கவ சங்க தலைவர்ஆர்.விஸ்வநாதன், நிர்வாகிகள் ஆர்.வி. எஸ்.அரங்க நாதன், ஆர். கோதண்டபாணி, சு.தமிழரசன், இளைஞரணி ஜான் சந்தியாகு, ஒன்றிய துணை செயலாளர் முத்து, தகவல் தொழில்நுட்ப அணி தினேஷ்அரசு, கருணாநிதி, கண்ணன், தாமோதரன், அழகப்பன், பாஸ்கரன், சுசீந்திரன் ,பூமி, ஆர்.எம். எல். முருகேசன் , முன்னாள் மாவட்ட இளைஞரணிஅமைப் பாளர் சி.ரவி மாவட்ட கழக செய்தி தொடர்பாளர் அ.அயூப் கான்,காங்கிரஸ் பொதுக் குழு உறுப்பினர் சார்லஸ் மற்றும் ,உறவினர்கள் சுற்றுப் புற கிராம மக்கள் மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினார்கள். தொடர்ந்து நலிவுற்றவர்களுக்கு வேஷ்டி சேலைகளை மாவட்ட கழக துணைச் செயலாளர் திருமதி ஜோன்ஸ் ருசோ, திருமதி எஸ் தர்மேரி ஸ்டீபன் ஆகியோர் வழங்கினார்கள்.

# அரியலூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர், ஆக. 28 -

அரியலூர் மாவட்ட செயற்குழுக் கூட்டம் அரியலூர் புறவழிச்சாலையில் உள்ள வாணி மஹாலில் கழக சட்டத் திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன் ஆகியோர்களின் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கீழ்கண்ட தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார்.

நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையை கொடுக்கப்பட்டுள்ள இலக்கினை பூர்த்தி செய்து முடித்த அனைவருக்கும் பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் இக்கூட்டம் தெரிவித்துக்கொள்கிறது.

கழகத் தலைவர் அவர்களின் உத்தரவுபடி கிளை கழகங்கள் தோறும் மினிட் நோட்டு போட்டு கிளை கழக கூட்டங்கள் நடத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தலைமை கழகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

கழகத் தலைவர் அவர்களின் உத்தரவுப்படி BLA2, BDA, BLC ஆகிய நிர்வாகிகளை திருத்தம் செய்து தலைமை கழகத்திற்கு அனுப்பிட இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது. இக்கூட்டத்தில் குன்னம் சட்டமன்றத் தொகுதி மேலிடப் பார்வையாளர் ஏ.கே.அருண், மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திர சேகரன், லதாபாலு, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் தனசேகர், இரா. கென்னடி, நகர கழக செயலாளர்கள் இரா.முருகேசன், வெ.கொ.கருணாநிதி, பேரூர் கழக செயலாளர் ப.கோபாலகிருஷ்ணன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள், பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், மா. அன்பழகன், ரெ. சக்கரவர்த்தி, ரெங்க.முருகன், கோ.அறிவழகன், ஆர்.கலிய பெருமாள், வி.எழில்மாறன்,

இரா.அண்ணாதுரை, ப.தனவேல், தெய்வ. இளையராஜன், நா.கணேசன், பொன். செல்வம், கே.ஜி.எஸ்.முருகன், இரா. செந்தில்குமார், பேரூர் கழக செயலாளர் அ.அல்போன்ஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் சி.ஆர்.எம். பொய்யாமொழி, வி.எம். ஷாஜகான், சுமதி கருணாநிதி, மாவட்ட அணி அமைப்பாளர்கள் கே.சி. லூயிகதிரவன், க.தர்மதுரை, பானுமதி ராஜேந்திரன், இரா.குலோத்துங்கன், க.கருப்புசாமி, வை.முருகானந்தம் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.ஆர். முருகேசன், வீர.சிவா, தர்மராஜ், ச.வசந்தபகலவன், பிரபாகரன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் வார்டு கிளைக் கழகத் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

# வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு மனுக்களுக்குத் தீர்வு – ஆவணங்கள் வழங்கினார்!

சென்னை, ஆக.28-

மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில் நமது தமிழ்நாடு அரசு மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாக “உங்களுடன் ஸ்டாலின்” என்ற புதிய திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததால் தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும்,

அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் / திட்டங்களை குறிப்பாக சாதி சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தகுதி வாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய” போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக உங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்கும் உன்னத திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டம் இன்று வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதியில் மண்டலம் 8 வார்டு-96 சென்னை அயனாவரம் பி.வி கோயில் தெரு சந்திப்பில் நேற்று (26.8.2025) செவ்வாய்க் கிழமை நடைபெற்றது

இதில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு பல்வேறு கோரிக்கைகளுக்காக முகாமில் பங்கேற்ற பயனாளிகளுக்கு குறிப்பாக மின் இணைப்புகளுக்கான நுகர்வோர் பெயர் மாற்றம்.1 மனுக்கள் பெறப்பட்டு அந்த மனுக்களுக்கும் தீர்வு கண்டும் CMCHIS முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 81 மனுக்கள் பெறப்பட்டு அந்த மனுக்களுக்கும் தீர்வு கண்டும் ஆதார் இணைய சேவைகள் மனு 30 பெறப்பட்டு மனுக்களுக்கும் தீர்வு கண்டும் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களில் பெயரை சேர்க்க மற்றும் திருத்தம் செய்ய கோரி - 15 மனுக்கள் பெறப்பட்டு அந்த மனுக்களுக்கும் தீர்வு கண்டும் சொத்து வரியை மதிப்பிடுவதற்கான விண்ணப்பங்கள் மற்றும் பெயர் மாற்றம் செய்ய கோரி 6 மனுக்கள் பெறப்பட்டு மனுக்களுக்கும் தீர்வு கண்டும் பட்டா நில அளவை மற்றும் பெயர் மாற்றுதல் 5 பெறப்பட்டு மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் (SSS) - ஓய்வூதியத் திட்டங்கள் / முதல்வர் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் - 25 மனுக்கள் பெறப்பட்டு

அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான உணவுகள் நிதியுதவி திட்டம் - 2 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும் மாற்றுத்திறனாளி களுக்கான தேசிய அடையாள அட்டை/ மாற்றுத்திறனாளிகளுக்கான தனிப்பட்ட அடையாள அட்டை -2 விண்ணப்பம் பெறப்பட்டு தீர்வு கண்டும்

கலைஞர் மகளிர் உரிமை தொகை -157 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

இதர மனுக்கள் -154 என மொத்தமாக 583 மனுக்கள் பெறப்பட்டு அதில் 562 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு அதற்குரிய ஆவணங்களை உரிய பயனாளிகளிடம் வழங்கினார்.

மேலும் இந்நிகழ்வில் மண்டல குழு தலைவர் கூ.பீ. ஜெயின், பகுதிக் கழகச் செயலாளர் வே.வாசு, எஸ்.தனலட்சுமி எம்.சி, வட்ட கழக செயலாளர்கள் எ.வேதா, காஞ்சி செ.துரை, எ.தேவராஜ், சீ.விக்னேஷ் மற்றும் 96 வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



அரசுத்துறைகளின் சேவைகளையும், திட்டங்களையும் மக்களின் வாழ்விடங்களுக்கே சென்று வழங்கிடவும், மக்கள் கோரிக்கைளுக்கு 45 நாட்களுக்குள் தீர்வு கண்டிடவும், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் சிறப்பு முகாமினை, கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக அவைத்தலைவர், உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் துவக்கிவைத்து, பல்வேறு துறைகளின் நலத்திட்டங்கள் மற்றும் முகாமில் தீர்வுகானப்பட்ட கோரிக்கைகளுக்கான சான்றிதழ்களை பயனாளர்களுக்கு வழங்கினார், இந்நிகழ்வில் அரசு அதிகாரிகள், பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர், துணைத்தலைவர் உள்ளிட்ட உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



தேனி மாவட்டம் கம்பம் நகராட்சியின் பல்வேறு பகுதிகளில் சுமார் 4.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தார்ச்சாலைகள், பேவர் பிளாக், சிமெண்ட் சாலைப் பணிகள் மிக வேகமாக நடைபெற்று வருவதை கம்பம் நகர்மன்றத் தலைவர் வனிதா நெப்போலியன், நகராட்சி ஆணையாளர், பொறியாளர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் ஏ.பி.பி. கன்ஸ்ட்ரக்சன் நிறுவனர் உடன் இருந்தனர்.



தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் வணிக வைசியசங்க உயர்நிலைப் பள்ளியில் முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டத்தை தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. துவக்கி வைத்து மாணவ – மாணவியர்களுடன் அமர்ந்து உணவு அருந்தினார்.நிகழ்வில் சங்கரன்கோவில் நகர்மன்ற தலைவர் கௌசல்யா,ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் லாலா சங்கர பாண்டியன் நகராட்சி ஆணையாளர் சாம் கிங்ஸ்டன்,மாவட்ட அவைத் தலைவர் சுப்பையா,நகர செயலாளர் பிரகாஷ் நகர் அவை தலைவர் முப்புடாதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.



நெல்லை மேற்கு மாநகரம் நெல்லை பேட்டை கிழக்கு பகுதி 23வது வட்ட தி.மு.க பிரதிநிதியான சரவணன் அவர்கள் ஒருசில வருடங்களுக்கு முன்பு இயற்கை எய்தினார். அவருக்கு மனைவியும் இரண்டு மகளும் உள்ளனர்.23 வது வார்டில் ‘ஓரணியில் தமிழ்நாடு’உறுப்பினர் சேர்க்கை முகாமில் நெல்லை மாநகர மேற்கு பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் ஈடுபட்டிருந்தார். அப்போது மறைந்த சரவணன் அவர்களின் மனைவியின் கோரிக்கையை ஏற்று அவர்களின் 2 வது மகள் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பயின்று வருகிறார். அவருக்கு நெல்லை மாநகர அலுவலகத்தில் மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் நிதி உதவி வழங்கினார். உடன் நெல்லை பகுதி பொறுப்பாளர் நமச்சிவாயம்,23 வது வார்டு பாக முகவர் முகேஷ் ஆகியோர் உள்ளனர்.



தருமபுரி ஒருங்கிணைந்த மாவட்ட முன்னாள் ஒன்றிய செயலாளர்,முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.மாரிமுத்து உடல்நலக்குறைவால் பென்னாகரம் பருவதனஹள்ளியில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார். அவரது உடலுக்கு கழகக் கொடியினை போர்த்தி மலர் மாலை அணிவித்து தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி அஞ்சலி செலுத்தினார்.உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் பச்சியப்பன், ஏ.எஸ்.சண்முகம், கிருஷ்ணன், வைகுந்தம், முன்னாள் ஒன்றிய செயலாளர் காளியப்பன்,ஐ.டி.விங் எம்.பி.கௌதம் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

## தமிழக பள்ளிக்கல்வித்துறை சார்பில்

# தலைமை ஆசிரியர்களுடன் கலந்துரையாடல் கூட்டம்!

## அமைச்சர் - அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆய்வு!

நெல்லை, ஆக.28-

விண்வெளியில் முதன் முதலில் கால்பதித்தது அனுமான் என ஒன்றிய பா.ஜ.க முன்னாள் அமைச்சர் கூறிய நிலையில் தமிழக பள்ளிக் கல்வித்துறை அறிவியல் சார்ந்து முற்போக்கு சிந்தனை யோடு தந்தை பெரியார் அவர்கள் வழியில்,முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு செயல்பட்டு வருகிறது.அறிவைச் சார்ந்து இருக்கும் எங்கள் பாதையில் நாங்கள் செல்லும்போது எங்களோடு பயணிக்க விரும்புப வர்கள் வரலாம். என நெல்லையில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி செய்தியாளர்களிடம் பேட்டியின் போது தெரிவித்தார்.

தமிழக பள்ளி கல்வித் துறை சார்பில் மாவட்டம் தோறும் தலைமையாசிரியர்களுடன் பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்துரையாடல் மற்றும் ஆய்வு கூட்டம் நடைபெற்று வருகிறது. அதன்படி நெல்லை பாளையங் கோட்டை நேருஜி கலையரங்கத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டார்.

பள்ளிக்கல்வித்துறையை மேம்படுத்துவது, அதற்கான சிறப்பான திட்டங்களை கொண்ட தலைமையாசிரியர்களிடமிருந்து கருத்துக்களை பெற்று அதனை மாநிலம் முழுவதும் அமல்படுத்துவது ஒன்றிய அரசின் சார்பில் நடத்தப்படும் அடைவுத் தேர்வு குறித்தும்,இதில் தேர்ச்சி பெற்றவர்கள் குறித்த தகவல்களை பெறுவது,ஜாதிய மோதல்களில் ஈடுபடும் மாணவர்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது, அது தொடர்பான நடவடிக்கைகள் உள்ளிட்டவை தொடர்பாக ஆசிரியர்களுடன் கலந்துரையாடுவதோடு அவர்களிடம் கேள்விகளை எழுப்பி பதில்களையும் அமைச்சர் பெற்றுக் கொண்டார்.தொடர்ந்து பள்ளிக் கல்வித்துறையை மேம்படுத்துவது குறித்து தலைமை ஆசிரியர்கள் முன்னிலையில் பேசினார்.

முன்னதாக அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

பள்ளிக்கல்வித்துறை சார்ந்த ஆய்வு கூட்டம் 23 வது மாவட்டமாக நெல்லையில் நடக்கிறது. மாணவர்களுக்கு என்னென்ன தேவை என்பது குறித்து ஆய்வு கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு முடிவெடுக்கப்படும்.ஒவ்வொரு மாவட்டத்திலும் தொடர்ந்து இந்த ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது.சிறப்பாக செயல்படும் தலைமை ஆசிரியர்களின் கருத்துக்களை பெற்று அதனை தமிழகம் முழுவதும் அமல்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளோம். எந்த அரசும் பள்ளிகளை மூட வேண்டும் என நினைக்கவில்லை கடந்த கல்வியாண்டு முதல் இந்த கல்வியாண்டு வரை புதிதாக நான்கு லட்சம் மாணவர்கள் அரசு பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். பள்ளிகளை மூடியது தொடர்பான செய்திகள் வெளியே வருகிறதே தவிர புதிய மாணவர்கள் சேர்க்கப்படுவது குறித்த தகவல்கள் வருவதில்லை.இருந்த போதிலும் மூடப்பட்ட 207 பள்ளிகளில் மூடுவதற்கான காரணங்கள் என்ன என்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.மாணவர்களை அரசு பள்ளிகளில் சேர்க்க களப்பணி மேற்கொண்டு 5 வயதிற்கு மேற்பட்ட மாணவர்கள் எங்கெல்லாம்இருக்கிறார்களோ அவர்களை அரசு பள்ளி ஆசிரியர்கள் கண்டறிந்து ஈ ரிஜிஸ்டரில் பதிவேற்றி இணைக்கப்பட்டு பள்ளிகளில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின் படி 2015 ஆம் ஆண்டு முதல் பிறப்பு விகிதம் படிப்படியாக குறைந்து வருகிறது. இதன் காரணமாகவும் கொரோனா காலத்தில் வாழ்வாதாரத்திற்காக பலர் இடம் பெயர்ந்து சென்று விட்டனர்.இது போன்ற காரணங்களால் மாணவர் சேர்க்கை இல்லாமல் போய் உள்ளது.மூடப்பட்ட பள்ளிகளில் இருக்கும் ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளியில் படிக்கும் வயதில் உள்ள மாணவர்களை மீண்டும் சேர்ப்பதற்கான அனைத்து பணிகளையும் அதிகாரிகள் செய்து வருகின்றனர்.

பி.எம்.ஶ்ரீ பள்ளியில் மாணவர்களிடையே பேசும்போது முன்னாள் ஒன்றிய அமைச்சர் அனுராக் தாக்கூர் விண்வெளிக்கு முதன் முதலில் சென்றது நீல் ஆம்ஸ்ட்ராங் அல்ல அனுமன் என கூறியுள்ளார் என்ற கேள்விக்கு,அவர் அவரது நம்பிக்கை சார்ந்து பேசியுள்ளார்.அவ்வாறு பேசுவது அவரது இஷ்டம் அது குறித்து நான் கருத்து கூற முன்வரவில்லை. ஆனால் நாங்கள் அறிவியல் சார்ந்து முற்போக்கு சிந்தனை யோடு தந்தை பெரியார் அவர்கள் வழியில் பள்ளிக் கல்வித்துறை தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு செயல்பட்டு வருகிறது.அறிவைச் சார்ந்து இருக்கும் எங்கள் பாதையில் நாங்கள் செல்லும்போது எங்களோடு பயணிக்க விரும்புபவர்கள் வரலாம் என்று பதில் கூறினார்.

நடைபெற்ற நிகழ்வில் பள்ளிக் கல்வித்துறை சார்ந்த அதிகாரிகள், ஆசிரியர்கள்,கலந்து கொண்டனர்.



முதலமைச்சர், கழக தலைவர் தளபதியார் அவர்கள் நல்லாட்சியில் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களின் வழிகாட்டுதலின்படி திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டாரம்,பெருமாபட்டு ஊராட்சிக்கான ‘உங்களுடன் ஸ்டாலின்’ சிறப்பு முகாமில் திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் திருப்பத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே.ஆர்.திருப்பதி, ஒன்றிய நிர்வாகிகள் திருலோகசந்தர், முரளி, அன்பழகன், நாஞ்சில்மனோகரன் மற்றும் அரசு துறை அதிகாரிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

## தி.மு.க. மகளிர் அணி

# மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்ட பொறுப்பாளர் ஒப்புதலோடு மகளிர் அணியின் மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### விழுப்புரம் தெற்கு மாவட்டம்

தலைவர் - சிவமகேஸ்வரி ரெயில்வே ஸ்டேஷன் தெரு, முண்டியம்பாக்கம், விழுப்புரம் மாவட்டம் - 605601.

துணைத் தலைவர் - ப. வள்ளி 17, புதுக் குடியிருப்பு, காந்திக்குப்பம், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 607203.

அமைப்பாளர் - மு. அமுதா 1/60, மெயின் ரோடு, கொடுங்கால் (ம) அஞ்சல், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605755.

துணை அமைப்பாளர்கள் - 1) ச. சுதா பெருமாள் கோவில் தெரு, ஆவியூர், திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605757. 2) சு. கல்பனா மாதா கோவில் தெரு, நரசிங்கனூர், கஞ்சனூர் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605203. 3) மு. கோட்டீஸ்வரி பழைய தண்ணீர் தொட்டி தெரு, இராதாபுரம், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605501. 4) ஆ. கலைவாணி நடுத் தெரு, வெள்ளையாம்பட்டு, பனமலை அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605201. 5) ச. புஷ்பலதா 15/9, நடுசெட்டித் தெரு, விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605652. சமூகவலைதள பொறுப்பாளர்கள் 1) கு. சுவேதா மாட்டான் தெரு, வீரபாண்டி (ம) அஞ்சல், திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605758. 2) அ. பிரவீனா மாதாகோவில் தெரு, புரவடை, கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605755.

### திருப்பூர் வடக்கு மாவட்டம்

தலைவர் - பொ. தனலட்சுமி 18/363, குமரன் வீதி, கைகாட்டிப்புதூர் அஞ்சல், அவிநாசி தாலுக்கா, திருப்பூர் - 641654.

துணைத் தலைவர் - ரா. மணி 229ஏ, பிரபு இல்லம், கோவை ரோடு, அன்னூர், கோவை - 641653.

அமைப்பாளர் - நா. கௌரி 274, முத்து கோபால் நகர், 4வது வீதி, அனுப்பர்பாளையம், திருப்பூர் - 641652.

துணை அமைப்பாளர்கள் - 1) கே. சாவித்ரி 7, வடக்கு தி, சேவூர், சேவூர் அஞ்சல், அவிநாசி தாலுக்கா, திருப்பூர் - 641655. 2) எம். லட்சுமி 3/486, குருவாயூரப்பன் நகர், வாரணாசி பாளையம் பிரிவு, வாவிபாளையம் அஞ்சல், திருப்பூர் - 641666. 3) கா. கீதா 52, திலகர் நகர் நால் ரோடு, அனுப்பர்பாளையம், திருப்பூர் - 641652. 4) மீனா (எ) மின்னல் 3/247, பெருமாநல்லூர், கால்நடை மருத்துவமனை எதிரில், திருப்பூர் - 641666. 5) வே. ஷோபனா 3/368சி, பைன் சிட்டி, ராமநாதம்பாளையம், வள்ளிபுரம், திருப்பூர் - 638103. 6) செ. சுதா 8/2895, குடோன்வீதி, பாண்டியன் நகர், பூலுவப்பட்டி, திருப்பூர் - 641602.

### திருப்பூர் வடக்கு மாநகரம்

தலைவர் - எஸ். கோகிலவாணி 1/111, தியாகி குமரன் காலனி 2வது வீதி, செட்டிபாளையம், திருப்பூர் - 641652.

துணைத் தலைவர் - கே.ஆர். கஸ்தூரி 9/54, காந்தி வீதி, 15.வேலம்பாளையம், திருப்பூர் - 641652.

அமைப்பாளர் - க. உமாமகேஸ்வரி 70, ராம் நகர் 4வது வீதி, பி.என். ரோடு, திருப்பூர் - 641602.

துணை அமைப்பாளர்கள் - 1) கே. கன்னியம்மாள் 128, மேற்கு வீதி, நெருப்பெரிச்சல், திருப்பூர் - 641602. 2) எஸ். ஜீவிதா 8/2289, நேரு வீதி, பாண்டியன் நகர், நெருப்பெரிச்சல், திருப்பூர் - 641602. 3) வே. தேவி 23/11, அண்ணா வீதி, குமரானந்தபுரம், திருப்பூர் - 641602. 4) ஆர். திலகவதி 4/704, பாரதி நகர் வடக்கு, பிச்சம்பாளையம், திருப்பூர் - 641603. 5) நா. மாதவி ஓலப்பாளையம் மாரியம்மன் கோவில் முதல் வீதி, திருப்பூர் - 641602. 6) எஸ். பிரியா பாவடிகல் வீதி, மண்ணரை, திருப்பூர் - 641607.

### திருப்பூர் மத்திய மாவட்டம்

திருப்பூர் மத்திய மாவட்ட மகளிர் அணி துணைத் தலைவராக நியமிக்கப்பட்ட திருமதி கு.பத்மாவதி மறைவெய்திய காரணத்தால், திருமதி மு.மல்லிகா (232, பட்டுக்கோட்டையார் நகர் 5வது வீதி, தென்னம்பாளையம் தெரு, திருப்பூர் - 641 604,) அவர்கள் திருப்பூர் மத்திய மாவட்ட துணைத் தலைவராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 26-08-2025.

ஜெ. ஹெலன்டேவிட்சன்,
செயலாளர்
தி.மு.க. மகளிர் அணி

# நீ திணிக்கப்பட்ட தலைவன் அல்ல; காலத்தால் கணிக்கப்பட்ட தலைவன்!

(கழகத் தலைவராகப் பொறுப்பேற்று எட்டாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் தளபதி - 28,08,2025)





மானிட மனங்களில் ஏற்றம் பெற்று நிற்கும் இலட்சிய உழைப்பின் இலக்கணமே!

தினம் தினம் திட்டங்கள் தந்து, ஏழை எளிய மக்களின் உதடுகளால் உச்சரிக்கக்கிடைத்த தமிழின இலக்கியமே!

மக்களால் போட்டுவிட்டாய் கோட்டையிலே கொள்கைச் சிம்மாசனம்! ஆம்;

தமிழகம் தந்து விட்டது உனக்கு மாபெரும் அரியாசனம்!

சின்னஞ்சிறு வயதிலேயே தியாகத்தில் மலர்ந்தவனாய் பூத்துச்சிரிக்கும் கோபாலபுரத்து நந்தவனத் குறிஞ்சிப் பூக்காடு நீ!

நெருக்கடிநிலை எனும் நெருப்பாற்றை நீந்திய கழகச் சூரியக் குதிரை நீ!

சிறைக் கொட்டடியிலும், எமது இதயச் சிறையிலும் வேள்வி வரலாறு எழுதிய எமது ஆயுள்கால நண்பனும் நீ! எழில் கொஞ்சும் இனிய ஆருயிர் அன்பனும் நீ!

அசைக்க முடியாத தொண்டர்களின் நம்பிக்கை நாயகனும், நடமாடும் நட்சத்திரமும் நீ! எந்திரமாய் உழைக்கும் தமிழ்நாட்டு மன்னவனும் நீ! எழுச்சி ஊட்டும் அரசியல் தென்னவனும் நீ!

இளைஞர் அணியைப் பட்டி, தொட்டிகளெல்லாம் பதியம் போட்ட சுயமரியாதைக் கழகத் தோட்டக்காரன் நீ!

தமிழ்த்தாயின் தலைமகனாம் கலைஞர் பெற்ற திராவிடப் போர் வாள் நீ!

கழகச் செயல் வீரர்,
பொதுக்குழு உறுப்பினர்,
செயற்குழு உறுப்பினர்,
மாநில இளைஞர் அணி அமைப்பாளர்,
துணைப் பொதுச் செயலாளர்,
கழகப் பொருளாளர்,
கழகச் செயல் தலைவர்
கழக தலைவர் எனக்

கழகச் சிகரத்தில், குருதி கொட்ட, கொட்ட உழைப்பின் கால்கள் வலியெடுத்து ஏறி நிற்கும் கழக அடலேறு அல்லவா நீ!

நீ திணிக்கப்பட்ட தலைவன் அல்ல; காலத்தால் கணிக்கப்பட்ட தலைவன்! கழகத்தால் பணிக்கப்பட்ட புதல்வன்!

கழகப் பணி ஆற்றிட தயாளுத்தாயாரின் கருப்பையிலிருந்தே நெருப்பைச் சுமந்துப் பயணம் செய்யும் கலைஞரின் வழியில் நிற்கும் சுயம்பு நீ!

பெரியாரையும். அண்ணாவையும் நெஞ்சில் எழுதி நெடும்பயணம் மேற்கொண்ட வைரம் பாய்ந்த வேங்கை நீ!

உள்ளாட்சிப் பணியில் நீ செய்த உயர்மிகு திட்டங்கள்; துணை முதல்வர் பொறுப்பில் நீ போட்ட கல்வெட்டுச் சட்டங்கள் ; அதற்காக நீ பெற்ற உலகளித்த உன்னதப் பட்டங்கள்! இவைகள் அனைத்தும் பொற்காலப் பதிவேட்டில் சரித்திரப் பட்டியலிடும் சாதனைகள்!

உனது இடைவிடாச் செங்கோல் சுழற்றும் ஆட்சிக் கொடையினால், மாந்தர் குலக் குடும்பங்கள் குதூகலம் அடைகின்றன!

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை,முதலமைச்சரின் காலை உணவு திட்டம், புதுமைப்பெண், தமிழ்ப் புதல்வன், நான் முதல்வன், நமக்கு நாமே , இல்லம் தேடிக் கல்வி, மக்களைத் தேடி மருத்துவம், மகளிர் விடியல் பயணம், கலைஞர் உரிமைத் தொகை என நீளுகின்றன!

கலைஞர் கனவு இல்லம், தொழில் முனைவோர் புத்தாக்கத் திறன், தொடக்க தமிழ்நாடு திட்டம் , தாயுமானவர், மீண்டும் மஞ்சள் பை, தோழி மகளிர் விடுதி, முதல்வரின் முகவரி, விண்வெளி தொழில் கொள்கை 2025, இன்னுயிர் காப்போம் நலம் காக்கும் 48 எனத் தொடர்கின்றன.

கிராமந்தோறும் நூலகம், மாற்றுத் திறனாளிகளுக்கு உள்ளாட்சி பணி, முதல்வர் படைப்பகம் .... என இப்படியான போர்ப் பரணி பாடி வரும் திட்டங்கள் பெருக்கெடுத்து இல்லந்தோறும் அமுத சுரபியாய் அணிவகுப்பு நடத்திக் கொண்டிருக்கின்றது!

தாத்தாக்களை விட சிறந்த ஆசிரியர்கள் எவரும் இல்லை என்பர். பாட்டிகளை விடச் சிறந்த மருத்துவர்கள் எவரும் இல்லை என்பர். இந்த இருவருமாகத் தமிழ்நாட்டில் ஆசிரியராகவும், மருத்துவராகவும் மாறிச் சேவை செய்யும் திராவிட இனத்துத் சேவகன் நீயே!

“எந்தச் சூழ்நிலையிலும் வாழப் பழகிக் கொள்! அப்போதுதான் ஏற்ற, தாழ்வுகளில் எதையும் தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவம் உண்டாகும்” என்ற அண்ணாவின் போதனைகளைக் கற்றுக் கொண்டவனே!

“கவனத்துடன் படிப்படியாக முன்னேறும் மனிதன் தான் ; மிகப்பெரிய அளவில் வெற்றி பெறுகிறான்!” என்ற அமெரிக்க நாட்டு ஆபிரகாம் லிங்கன் தத்துவத்தை உணர்ந்தவனே!

“பிறர் நினைத்ததை எழுதும் காகிதமாக இருக்காதே; நீ நினைத்ததை எழுதும் பேனாவாக இரு” என்ற கலைஞரின் பொன் மொழியாய்ப் பூத்தவனே!

“அகிம்சை என்னும் அறவழியை ஆயுதமாக எடுத்துக் கொள்ளுங்கள்; அனைவரும் உங்கள் இதய சிம்மாசனத்தில் அமர்ந்து கொள்வர்! புன்னகைத்துப் பாருங்கள்; மானுட நட்புகள் கிடைக்கும்! ....

பிரார்த்தனை செய்யுங்கள்; நல்ல மனமும், குணமும் கிடைக்கும்! நம்பிக்கை வையுங்கள்; பயணத்தில் வெற்றி கிடைக்கும்! உண்மையாய் உறுதியாக உழைத்துப் பாருங்கள்; வாழ்க்கையில் எல்லாமே கிடைக்கும்! “ என்ற காந்தியாரின் வாசகங்களை மக்கள் பணியில் ஏற்றுக்கொண்டவன் நீ!

நீ எழுப்பும் மாநில சுயாட்சி முழக்கம்.. கன்னியாகுமரி கடல் அலைத் துள்ளல் துடிப்பிலிருந்து, காஷ்மீர் மலை முகட்டில் மோதித் தேசிய நாதமாய் அல்லவா எதிரொலிக்கிறது.

நீ தரும் அரசியல் செய்திகளால் செங்கோட்டை நாற்காலிகள் அடிக்கடி அதிர்ச்சியாகி வயிற்றுப்போக்கால் மருத்துவம் பார்த்துக் கொண்டிருக்கின்றன!

நீ நடத்தும் நியாயங்களின் பயணத்தில் நீதி மன்றங்களின் கதவுகள் தட்டாமலையே திறக்கப்படுகின்றன!

காலை உணவில் பசியாற்றி இலட்சக் கணக்கான கால் சட்டைப் பருவங்களைக் களவாடிக் கொண்டிருப்பவன் நீ!

அரவணைக்கும் அன்புக் கரங்களால் கோட்டையில் இருந்தாலும், குவலயம் வணங்கும் கோடிக்கணக்கான குடிசை மனங்களைக் கொள்ளையடித்த கோபாலபுர நந்தவன ரோஜா அல்லவா நீ ?

நலத்திட்டங்களாலும், பல சட்டங்களாலும் “அப்பா!... அப்பா!..” எனப் பாசப்பிணைப்பில் விழுந்த பள்ளிக்கூடச் செவிலித் தந்தையானவன் நீ!

மக்களை வழிநடத்தும் நாடு குறித்துக் வைத்துள்ள முதல்வன் நீ! அதனால் நீ எதிரிகளால் கூட பிரிக்க முடியாத மக்களின் புதல்வன்!

பிணி, மூப்பு, சாக்காட்டில் உழலும் மாந்தர்களை மீட்கப் புறப்பட்ட தமிழகத்தின் தாதியான “ஜென்டில்மேன் வித் தி லாம்ப்” நீ! கிராமங்கள் தோறும் மருத்துவச்சியாய்த் தோன்றிப் “புளாரன்ஸ் நைட்டிங்கேலாக” நிற்பவனே!



கவிஞர்
தமிழ்தாசன்
தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்

பேருந்துப் பயணங்களில் கட்டண விசிறி இல்லாமல் தென்றலாக வீசுபவன்! மகளிர் மனங்களில் மல்லிகையாய் மணம் பரப்பி நிற்பவன்!

நீ நட்பையும், நாடுபவரையும் முறிக்கும் தாமரை இலைத் தண்ணீரல்ல; இரும்பையும், எஃகையும் ஈர்த்து வைத்துக்கொள்ளும் இதயக் காந்தம்!

பகைவருக்கோ, நீ ஒட்டாத கொள்கைப் பாதரசம்! அன்பர்களுக்கு நீ திகட்டாத அதிரசம்! உன் பேச்சுகள் எதிரிகளை மயக்கும் மதுரசம்! உன் சாதனைப் படைப்புகளில் காண்பதோ அஜந்தா ஓவிய நவரசம்!

உனது வாய்ப் பேச்சான வாள் வீச்சோ, காயப்படுத்தாத கலிங்கத்துப் பரணி! அபயம் தேடிவரும் அயலவர்க்கும், நீயோ பசிநீக்கும் அன்னபூரணி!

நீ என்றும் நிதி இழப்பைப் பற்றிக் கவலைப்படாத தங்க வயல்! ஆனால், உன் இருப்பைப் பற்றி நினைவுப் படுத்திக் கொண்டிருக்கும் இந்தியாவின் அரசியல் புயல்!

திறமை, உழைப்பு, தியாகம், தகுதி என இப்படி உனது உதிரச் சூட்டில் சுடர்முகம் தரும் வடுக்களின் அத்தியாயங்கள்! ஈரோட்டுப் பகலவனை காஞ்சிப் பல்கலைக் கழகத்தை திருக்குவளைத் திருவிளக்கைத் தூக்கிச் சுமந்தே உனது தோள்கள் காய்த்துத் தழும்புகளாகி இருக்கின்றன!

உனது வேட்கையும், இலட்சியமும், திராவிட இனத்தினைப் பற்றியே வலம் வருகின்றன!

உனது ஆளுமையில் மக்கள் மனங்களை அறுவடை செய்து கின்னஸ் சாதனையாளராக விளங்கும் அதிசயம் நீ

திராவிட நெறி, தத்துவம், பண்பாடு, வரலாறு, மானிடவியல் காணப் புறப்பட்ட கழக வேங்கையே!

உனது புயல் வேகச் சாதனைகள் கண்டு தில்லிச் செங்கோட்டையே அரசியல் பூகம்பத்தால் ஆட்டம் கண்டு இருக்கிறது!

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவைகளால் கர்வம் கொண்ட கண்மணிகளாய் ஒளி படைக்கின்றோம்!

உம்மை நாங்கள் கரம் கூப்பி வாழ்த்துகின்றோம்! சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்!

தொடரட்டும் உன் தலைமைப் பணி!

நாங்கள் உங்கள் அடிச்சுவட்டில் பின் தொடர்கிறோம்.